## திண்டுக்கல் தனியார் மருத்துவமனையில் தீ விபத்து:

# உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச. 14-

திண்டுக்கல் தனியார் மருத்துவமனையில் நிகழ்ந்த தீ விபத்தில் உயிரிழுந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் தலா ரூ.3 லட்சம் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மாநகராட்சிப் பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் நேற்று முன்தினம் (12.12.2024) இரவு 9.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீ விபத்தில் தாடிக்கொம்பு, பாலதிருப்பதி நகரைச் சேர்ந்த மணிமுருகன் (வயது 30) த/பெ.ஜெகநாதன், திருமதி. மாரியம்மாள் (வயது 50) க/பெ.ஜெகநாதன், தேனி மாவட்டம் சீலம்பட்டி அம்பேத்கர் காலனியைச் சேர்ந்த சுருளி (வயது 50) த/பெ. கந்தசாமி, திருமதி.சுப்புலட்சுமி (வயது 45) க/பெ.சுருளி, திண்டுக்கல் என்.ஜி.ஓ. காலனியைச் சேர்ந்த ராஜசேகர் (வயது 36) த/பெ.ராஜேந்திரன், செல்வி.கோபிகா (வயது 6) த/பெ. ராஜசேகர் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இந்த விபத்தில் பலத்த காயமடைந்தவர்கள் அருகிலுள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த தீ விபத்தில் உயிரிழந்த ஆறு நபர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதுடன் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## புதுடெல்லியில் உள்துறை அமைச்சர் அமித்ஷா வழங்கினார்!

# தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகளுக்கு 5 விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, டிச. 14 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (13.12.2024) தலைமைச்செயலகத்தில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், புதுதில்லியில் நடைபெற்ற மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையம் (NAFSCOB), மாநில மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை எளிதாக்குவதற்கும், குறிப்பாக கூட்டுறவு கடன்களை மேம்படுத்துவதற்கும் 19.5.1964 அன்று நிறுவப்பட்டது. இந்த இணையத்தில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில கூட்டுறவு வங்கிகளும் உறுப்பினர்களாக உள்ளன.

இந்த தேசிய இணையம் ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு அமைப்புகளின் கீழ் சிறப்பாக செயல்படும், தலைமை வங்கி, மாவட்ட மத்திய வங்கி, கூட்டுறவு கடன் சங்கங்கள் என செயல்படும் மூன்றடுக்கு கூட்டுறவு வங்கிகள் மற்றும் தலைமை வங்கியின் கீழ் செயல்படும் தொடக்கக் கூட்டுறவு கடன் சங்கங்கள் என இரண்டடுக்கு முறையில் செயல்படும் கூட்டுறவு வங்கிகளுக்கு விருதுகளை வழங்கி வருகிறது.

இந்த அமைப்பு 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 60 ஆண்டுகளைக் கடந்து வைரவிழா கொண்டாடும் தருணத்தில் விருது வழங்கும் விழாவினை 26.11.2023 அன்று புதுதில்லியில் நடத்தியது. 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளில் சிறப்பாக செயல்பட்ட வங்கிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

இந்த வைர விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், விருதினை ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித்ஷா வழங்கிட, தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பெற்றுக்கொண்டார்.

இவ்விழாவில் தமிழ்நாட்டு கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்து விருதுகளின் விவரங்கள்:

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவி யுடன் நடத்தப்பட்டு வரும் விவசாயக் கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்திற்கு 2023-24ஆம் ஆண்டில் இந்திய அளவில் சிறந்த பயிற்சி நிலையமாக தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசு வழங்கப்பட்டது.

மூன்றடுக்கு கூட்டுறவு கடன் கட்டமைப்பில் 2022-23ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த சிறந்த செயல்பாட்டிற்கான மூன்றாம் பரிசு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு வழங்கப்பட்டது.

குறுகிய கால கூட்டுறவு கடன் கட்டமைப்பில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த வங்கிச் சேவையினை வழங்கி வருவதற்காக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது.

குறுகிய கால கூட்டுறவு கடன் கட்டமைப்பில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த வங்கிச் சேவையினை வழங்கி வருவதற்காக சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது.

மதுரை மாவட்டத்திலுள்ள பூண்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு 2022-23ஆம் ஆண்டில் சிறந்த செயல்பாட்டிற்கான மூன்றாம் பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன் மற்றும் கூட்டுறவுத் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வினோத் வேலாயுதம் முன்னிலை! அ.குப்பன் தலைமையில்

# 109வது வட்டத்தில் எளியோர் எழுச்சி நாள்! 500 பேருக்கு நலஉதவிகள்!

## நே.சிற்றரசு – தயாநிதி மாறன் – அன்பகம் கலை – நா.எழிலன் பங்கேற்பு!

சென்னை, டிச.14-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 109வது வட்டத்தில் தி.மு.க. சார்பில் எளியோர் எழுச்சி நாள் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (14.12.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் திருவேங்கடபுரம் பெருமாள் கோவில் அருகில், சூளைமேடு சென்னை 94-ல் அ.குப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

முன்னிலை : வினோத் வேலாயுதம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர்

வரவேற்புரை : க.சிட்டிபாபு, வி.தீபா, சு.சண்முகம், பா.ஜெயராணி, ஜி. இளங்கோ எஸ்.மேட்லின் மேரி, எம்.தியாகராஜன், ஆர். முனிரத்தினம், எஸ்.கே. பழனி, எம்.அண்ணாமலை, பா.ஜீவா, டி.முருகேஸ்வரன்

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி, அன்பகம் கலை, மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தூ.விக்டர், ஆர். என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜே.எஸ்.அகஸ்டின்பாபு, நுங்கை வி.எஸ். ராஜ், டி.ஜோஸ்டேனியல், எம்.டி.ஆர்.நாதன், பா.பிரகாஷ், மு.சீனிவாசன், ஜி.வி. சரவணன், டாக்டர். ஜீவகன், அய்யநாதன், யோகேஸ்வரி, சந்திரசேகர், எம்.டி.ஆர்.சாரதி, மணிமாறன், புவி.பாலாஜி, ஸ்டெர்லிங் மோகன், என்.பி.இதயத் பாஷா, பா.கமலக்கண்ணன், ர.பொன்னம்மாள், வரதை தா.பரி, ச.டேவிட் இன்பராஜ், த.குணசேகரன், தினேஷ் பிரபு, மு.மோகன் மற்றும் மாவட்ட, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

## மு.க.தமிழரசு – நே.சிற்றரசு – சேலம் சுஜாதா – இளம் பேச்சாளர் சாய் ரித்திக் சக்திவேல் சிறப்புரை!

# 112 ‘அ’ வட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்! நலஉதவிகள்!

## தயாநிதி மாறன் எம்.பி. – அன்பகம் கலை – நா.எழிலன் – வே.கௌதம் – வினோத் வேலாயுதம் பங்கேற்பு!

சென்னை, டிச.14-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112 ‘அ’ வட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் - இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாள் இன்று (14.12.2024 - சனிக்கிழமை) மாலை 6:00 மணி அளவில் டிரஸ்ட்புரம் 6வது தெருவில் 112 ‘அ’ வட்ட செயலாளர் மு.மோகன் தலைமையில் நடைபெறுகிறது.

முன்னிலை : வினோத் வேலாயுதம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர்

கூட்டத்தில் மு.க. தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, தலைமை கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, கழக இளம் பேச்சாளர் சாய் ரித்திக் சக்திவேல், தயாநிதி மாறன் எம்.பி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் எழில் நாகநாதன் எம்.எல்.ஏ, ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் வே.கௌதமன் ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

பகுதி கழக நிர்வாகிகள்: புவி பாலாஜி, ஸ்டெர்லிங் மோகன், என்.பி.இதயாத் பாஷா, பொன்னம்மாள், ப.கமலக்கண்ணன்

வட்டக் கழக செயலாளர்கள்: வரதை.த.பரி, க. சிட்டிபாபு, த.குணசேகர், கே.எஸ்.தினேஷ்பிரபு, ச.டேவிட்இன்பராஜ், மாவட்ட நிர்வாகிகள்: தூ. விக்டர், ஆர்.என்.துரை, ஜே.எஸ்.அகஸ்டின்பாபு, வி.எஸ்.கலைச்செல்வன், சங்கீதா மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் இளைஞர் அணி மகளிர் அணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

## உத்திரமேரூர் ஏரியின் கலங்கள் உபரி நீரால்

# நரிமடை பகுதியில் சாலைப் போக்குவரத்து பாதிப்பு!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. - க.செல்வம் எம்.பி. உடனடியாக சரி செய்தனர்!

காஞ்சிபுரம், டிச.14-

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிகப்பெரிய ஏரிகளில் ஒன்றான வைரமேகம் என அழைக்கப்படும் உத்திரமேரூர் ஏரி அதன் முழு கொள்ளளவு எட்டியுள்ள நிலையில் உபரி நீர் கலங்கள் வழியாக ஆர்ப்பரித்து செல்கின்றது

அவ்வாறு செல்கின்ற நீர் கடைமடை பகுதியான நரிமடை பகுதியில் அதிக அளவில் சென்ற காரணத்தினால் அந்த வழியே சாலை போக்குவரத்து முழுமையாக தடைபட்டது.

இதனால் சுமார் 40க்கும் மேற்பட்ட கிராம பொது மக்கள் போக்குவரத்து வழி இன்றி சிரமப்பட்டார்கள்.

இதனை அறிந்து நேற்று (13122024 வெள்ளிக்கிழமை) பாதிக்கப்பட்ட இடத்தை பார்வையிட்டு பாதிப்படைந்த சாலையை உடனடியாக சீர் செய்து சாலை போக்குவரத்தை மீண்டும் மக்கள் பயன்பாட்டுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க. சுந்தர் மற்றும் காஞ்சிபுரம் பாராளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம் ஆகியோர் கொண்டு வந்தனர்.

நேரடியாக நரிமடை பகுதிக்கு வருகை தந்து தடைப்பட்ட சாலை போக்குவரத்தை உடனடியாக சரி செய்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வந்த சட்டமன்ற உறுப்பினருக்கு பாதிக்கப்பட்ட பொதுமக்கள் நன்றியை கூறினார்கள்.

உடன் ஒன்றிய கழகச் செயலாளரும் ஒன்றிய குழு உறுப்பினருமான கெ. ஞானசேகரன், பேரூர் கழகச் செயலாளர் என். எஸ்..பாரிவள்ளல்,

தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், பேரூராட்சி மன்ற தலைவர் பி.சசிகுமார், துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜன், ஒன்றிய அவை தலைவர் சுப்பராயன், ஒன்றிய கவுன்சிலர் கலைச்செல்வி உமாபதி, ஊராட்சி மன்ற தலைவர் கிருஷ்ணன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கோபி மற்றும் ஆதிநாராயணன் மற்றும் தலைமை கழக மாவட்ட ஒன்றிய பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டார்கள்



### சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! இன்று (14-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு!

**மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!**

| வ. எண் | வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 112அ | மு.மோகன் வட்டக் கழக செயலாளர் | ட்ரஸ்ட்புரம் 6வது தெரு, கோடம்பாக்கம், சென்னை24 | சேலம் சுஜாதா தலைமைக்கழக பேச்சாளர் சாய் ரித்திக் சக்திவேல் தலைமைக் கழக இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே. சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## எஸ்.ஆர். ராஜாசுரேஷ்குமார், நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலை!

# துணை முதல்வர் பிறந்த நாள்! 122வது வட்டத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, டிச. 14-

சென்னை, தென் மேற்கு மாவட்டம் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, 122வது வட்டத்தில் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி (15.12.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலையில் 122வது வட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜாசுரேஷ் குமார், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதிஎம்.சி. முன்னிலையில்

(1). வேன் சிவா தலைமையில், ஆலையம்மன் கோவில் அருகில்

(2). வி ஜான்சன், டி. அருள்சாமி தலைமையில், எஸ்.எம்.நகர், ஏ முதல் ஜே பிளாக் வரை அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு கலந்து கொண்டு கழகக் கொடி யேற்றி அறுசுவை உணவு வழங்குகிறார்.

எனவே இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழகத்தை சார்ந்த நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (பி.எல்.ஏ. 2), பாக உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

## ‘டான்டி’ பிரகாஷ் தலைமை! ஜெ. கருணாநிதி - கே. ஏழுமலை - கோ.சு. மணி, - எஸ். ஜோயல் முன்னிலை!

# துணை முதல்வர் பிறந்த நாள்: தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, டிச.14-

சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை ஒட்டி தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி ‘டான்டி’ பிரகாஷ் தலைமையில் நாளை 15.12.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11:00 மணிக்கு தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு ஜெ.கருணாநிதி எம். எல்.ஏ., பகுதி செயலாளர் கே. ஏழுமலை, தலைமை பொதுக் குழு உறுப்பினர் கோ.சு. மணி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் ஆகியோர் முன்னிலையிலும்,

இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம். சி., மாவட்ட துணை அமைப்பாளர்கள்,எஸ்.உமாசங்கர், எ.அஸ்வின் குமார்,

தினேஷ் மாணிக்கம், த.விக்னேஸ்வரன் ஆகியோர் வரவேற்புரையில் மாவட்ட கழக செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ ஏழை எளிய மக்களுக்கு தையல் இயந்திரம் வழங்குகிறார்.

இதில் மாம்பலம் ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, கோடம்பாக்கம் மு.சத்யா, கே.மலர், என்.அன்பழகன்

மற்றும் மாநில மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள் கழக உடன் பிறப்புக்கள் அனைவரும் வருக! வருக என அன்புடன் வரவேற்கிறோம்.

வட்டச் செயலாளர்கள் கே.எஸ். வெல்டிங் ராஜா, பி.மாரி, லலிதாபுரம் என். துரை ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.






சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் தெற்கு பகுதி, 107அ வட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் வி.எம்.சிவா தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு பங்கேற்று எழுச்சி உரையாற்றினார். இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதி செயலாளர் ந.ராமலிங்கம், தலைமை கழக பேச்சாளர் கழக கொள்கைபரப்பு துணை செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, இளம் பேச்சாளர் தி.கோகுல், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, எஸ்.ராம்குமார், ராணி ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.டி.முருகன், கராத்தே ஆனந்த், மாவட்ட அமைப்பாளர்கள் ச.அசோக்குமார், யோகேஸ்வரி சுந்தரேசன், ப. பிரகாஷ், திருமலை பொன்னுரங்கம், டி.எஸ்.ராஜா, ரங்கராஜ், தெற்கு பகுதிக்கு உட்பட்ட பகுதி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளுக்கு உட்பட்ட பகுதி/அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னணியினர் நிர்வாகிகள் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## இராயபுரம் கிழக்குப் பகுதி

# 49-வது வட்டக் கழகப் பொறுப்பாளர் கலைச்செல்வன் சகோதரர் பிரதாப் சந்தர் மறைவு!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. அஞ்சலி!


சென்னை, டிச.14-

சென்னை வடக்கு மாவட்டம் இ.ராயபுரம் கிழக்குப் பகுதி 49-வது வட்ட கழகப் பொறுப்பாளர் கலைச்செல்வன் சகோதரரும், காஞ்சிபுரம் மாவட்ட சித்தாமூர் ஒன்றிய முன்னாள் செயலாளர் பாண்டுரங்கனின் சகோதரர் மகன் கழகத் தோழர் பிரதாப் சந்தர் (வயது 51) 10.12.2024 அன்று மாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் அன்னாரின் உடலுக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர் டி.சேகர், சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ராயபுரம் கிழக்குப் பகுதி செயலாளர் இரா.செந்தில் குமார், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் பி.டி. பாண்டிச்செல்வம், மாநில சட்டத்துறை துணை செயலாளர் மருது கணேஷ், தா. இளை அருணா, வே. சிவகுமார், நா.சண்முகம், த.ஜெயபாலன், கு.சுந்தர், வட்ட செயலாளர் என். கிருஷ்ணன், காட்டன் சதீஷ், க.கோவிந்தராஜ், பெ. கண்ணன், முன்னாள் வட்ட செயலாளர் எல். சீனிவாசன், க.சேகரன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மோகனூர் ப.சின்னு
### டிசம்பர் 14 (1995)



திராவிட இயக்கத்தில் பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கியவுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

வட்டப் பிரதிநிதி, துணைச் செயலாளர், கிளைச் செயலாளர், ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து, மோகனூர் பகுதியில் கழகம் வளரப் பாடுபட்டவர்

சேலம் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவராகவும் – மோகனூர் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த கறுப்புக் கொடி, இலங்கைத் தமிழர், கைலாசம் கமிஷன் எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, இந்தி எதிர்ப்பு போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**